# The Effects of Internet Usage on Youths' Socio Ethical Behavior: An Applied Ethical View

**Dr. K. Kanesarajah**[1]

[1]Senior Lecturer, Department of Social Sciences
South Eastern University of Sri Lanka.

Corresponding author's e-mail: drkanesraj@gmail.com

**Abstract:** Internet is a vast system of computers that are networked or linked together to exchange information. It is a network of networks which shares global resource that is not owned or regulated by anyone. Internet is not only about computers, it's about people, communication and sharing information. Historically there are different methods of information sharing yet internet and computers make us realize how the world is narrowed down to a village. With the arrival of the internet, world communication took a giant leap which leads to a way of overcoming physical boundaries like distance to allow minds to meet by having conversations with peoples across the world. The world today depends and thrives on information. Information not being global is of little use and internet gives us the ability to access varies kinds of information around the globe at any given time. At the same time, the social networks such as facebook, twitter and etc. change the behavior of youths sometimes in negative ways in certain situations. This questions the ethics of a person. Ethics is a principle which tells what is right and wrong. Everybody knows it's wrong to lie, cheat, steal and etc. However, some people do not know that disadvantages of using social networks leads into behavior disorder. Nowadays most of the youths are addicted to social networks like facebook, twitter, and etc. and we could also see the rate of cybercrime increasing. This creates more practical problems in the society. My view of this research is to give youths' erroneous usage of internet and facebook usage. The outcome of this analysis is that most of the youths are using internet and facebook for unfavorable information. The research is based on analytical, evaluation and distributive methods. The suggestion has been presided.

**Keywords:** Internet, Facebook, Behavior Disorder, Immoral

**ஆய்வு அறிமுகம்**

தொடர்பாடல் சாதனங்கள் இயற்கை காட்டிய வழிமுறையின் அடிப்டையில் மனிதன் ஆறாம் அறிவைப் பயன்படுத்தி அறிவியல் மூலம் பெற்றதாகும். இது இன்று மனிதகுலம் பல வகைகளில், பல்வேறு வழிகளில் பயன்படுத்தப்படுகின்ற தகவல் தொடர்பு வழிமுறைகளாகும். குகைகளை வீடாகப்பயன்படுத்திய காலம் முதல் விண்ணிலே வீடமைத்து வாழும் வழிமுறைகளை ஆராய்ந்து கொண்டிருக்கும் இன்றைய காலம் வரையிலும் மட்டுமல்லாது. நிலவில் குடியேறிய பிறகும் கூட மனித குலத்தின் அடிப்படைத் தேவைகளாகத் திகழப்போவது தகவல் தொடர்பு என்பதுவே ஆகும்.

தகவல் தொடர்பு என்றால் என்ன? என்பதனை நோக்குவோமாக இருந்தால் இதில் தகவல் தொடர்பு என்ற இரண்டு சொற்கள் இணைந்துள்ளன. "தகவல்"(Information) என்றால் பிறர்அறியும் வகையில் வெளிப்படுத்தப்படும். செய்தி என்று பொருளாகும். "தொடர்பு"(Comunication) என்பது இரு இடங்களை இணைப்பது "இணைப்பு" என்று பொருளாகும். எனவேதான் தகவல் தொடர்பு என்பதற்கு ஓர் இடத்தில் இருந்து தொலைவில் இருக்கும் மற்றொரு இடத்திற்கு தகவல்களை பரிமாறிக் கொள்ள பயன்படும் அமைப்பு என்று பொருள் கொள்ளல் வேண்டும்.

தகவல் தொடர்பு சிறப்பானமுறையில் இடம்பெறுவதற்கு பயன்படுத்தப்படுகின்ற தொழில் நுட்பங்களே தகவல் தொழில்நுட்பம் என்று அழைக்கப்படுகின்றன. தகவல் தொழில்நுட்பம் என்றால் என்ன? என்பதனை நோக்குவோமாக இருந்தால் கணனிகளுடன் தகவல்களை ஒழுங்கமைத்தல், கணனியல், இலத்திரனியல், தொலைத்தொடர்பு போன்ற தொழில்நுட்பங்களைப்

பயன்படுத்தி தகவல்களை ஒரு செய்முறைக்கு உட்படுத்தி ஒழுங்கமைப்புச் செய்தல், பரிமாற்றம் செய்தல் போன்ற செயற்பாடுகளை உள்ளடக்கியதாகும்.

ஆரம்பத்தில் தொடர்பாடலானது இருந்த முறைக்கும் இன்று உள்ள முறைக்குமிடையே பல வேறுபாடுகள் காணப்படுகிறது. தற்போது இணையம் மிகமுக்கியமானதொன்றாக காணப்படுகின்றது. விஞ்ஞானத்தினதும், தொழில் நுட்பத்தினதும் வளர்ச்சியினால் தோற்றம் பெற்றதொன்றாக இணையம் காணப்படுகின்றது. எதிர்பார்க்காமல் பிறந்த இவ் இணையம் மக்களுக்கு எதிர்பார்க்காத பல மகத்தான சேவைகளை சமகாலத்தில் ஆற்றி வருகின்றது.

இணையத்தினுடைய வளர்ச்சியினால் உலகமானது ஒரு சிறிய கிராமமாக சுருங்கி விட்டதுடன். உலக நடப்புக்களை நேருக்கு நேர் பார்க்கும் கண்ணாடி போலவும் இன்றைய காலகட்டம் அமைந்துள்ளது. இதனால் எல்லா தகவல்களையும் இருந்த இடத்தில் இருந்து பார்ப்பது மட்டுமல்லாமல், எல்லா வேலைகளையும் இருந்த இடத்தில் இருந்து கொண்டு முடிப்பதற்கும், ஒருவருக்கொருவர் முகம் பார்த்து உரையாடவும் இணையம் வழியமைத்துக் கொடுத்திருக்கிறது. இதன்மூலமாக நன்மைகளும் அதே அளவில் சமுதாயத்தை சீரழிக்கும் தீமைகளும் உள்ளன.இதனை அலசி ஆராய்ந்து பார்க்கும் பக்குவமும்,மனப்பான்மையும் அனைவரிடமும் ஏற்பட்டுவிடாது.முக்கியமாக ஒவ்வொரு நாட்டின் தூண்கள் எனப்படும் இளைஞர்கள் இவற்றின் மூலம் எந்தளவு உயர்ந்திருக்கின்றனரோ அதே அளவில் சமுதாயத்தில் பல பிரச்சினைகளும் உள்ளனது. இணையத்தினுடைய அளவுகடந்த பாவனையினால் சமூகத்தினது கலை, கலாச்சார, பண்பாட்டு விழுமியரீதியான ஒழுக்க நியமங்களை பாதிக்கின்ற வகையிலும் இதனது செயற்பாடு காணப்படுகின்றது. ஒழுக்கவியல் என்பது ஒழுகு, நட, கடைப்பிடி என்று பொருள் கொள்ளலாம். இதன் ஒரு பிரிவாக பிரயோக ஒழுக்கவியல் உள்ளது. பிரயோக ஒழுக்கவியல் என்பது ஒழுக்கவியல் கோட்பாடுகளின் அடிப்படையில் அமைந்த ஓர் மெய்யியல் விசாரணை முறையாகும். மனிதனின் நடைமுறை வாழ்க்கையுடன் இணைந்த நிலையில் ஒழுக்கத் தீர்ப்புகளினைத் தீர்மானிப்பதற்காக குறிப்பிடத்தக்க சூழ்நிலையில் ஒழுக்கவியல் கொட்பாடுகளினை பிரயோகப்படுத்தி பரிசீலனை செய்து கொள்ளுதலே பிரயோக ஒழுக்கவியல் ஆகும். பொது விடயப்பரப்பில் இருந்து கொண்டு கடப்பாடுகளை விபரித்துக்காட்டுவது ஒழுக்கவியலாகும்.

உலகின் விஞ்ஞான, தொழிநுட்ப வளர்ச்சி பயன்பாடுகளுக்கு தேவைப்பட்டாலும் அதன் வரம்பு மீறிய செயல்கள் மக்கள் மத்தியில் ஒழுக்க தேவையைத் துண்டியது. ஆகவேதான் பிரயோக துறைகளின் ஒழுக்க பணிகளை நிர்மாணிக்க வேண்டிய தேவைப்பாடு ஏற்பட்ட போதே பிரயோக ஒழுக்கவியலின் தோற்றம் இடம் பெற்றது.

**ஆய்வு நோக்கம்**

மெய்யியலின் ஆய்வுவிடயமானது காலத்துக்குகாலம் மாறுபட்டதாகவே காணப்படுகின்றது. அந்தவகையில் மெய்யியலானது பல விடயங்களை ஆய்வுக்கு உட்படுத்தி இருந்தாலும் சமகாலத்தில் ஒழுக்கவியல் சார்ந்த விடயங்களையே பெரிதும் கவனம் செலுத்தி வருகின்றது. ஒழுக்கவியலானது பல வகைப்பட்டாலும் சமகாலத்தில் பிரயோக ஒழுக்கவியலானது முக்கியப்படுத்தப்படுகின்றது. இவ்வாறு முக்கியப்படுத்தப்படுவதற்குக் காரணம் பிரயோக ஒழுக்கவியலானது நடைமுறைசார்ந்த விடயங்களிலே அதிக கவனம் செலுத்தி வருவதனால் ஆகும்.இவ் ஆய்வின் பிரதான நோக்கமாக அமைந்து காணப்படுவது இணையப் பாவனையினால் எவ்வாறு சமூக, ஒழுக்க நடத்தைகள் பாதிப்புக்குள்ளாகின்றது என்பதனை தெரியப்படுத்துவதாகும்.

இவ் ஆய்வின் துணை நோக்கம்களாக:

1. இந்த ஆய்வுக்கட்டுரை மூலமாக இணையப்பாவனையால் ஒழுக்க விழுமியங்கள்பாதிப்படையாத வண்ணம் இயன்ற அளவு விழிப்புணர்வினை ஏற்படுத்தல்.

2. இணையப் பாவனை பற்றியும் சமூகத்திற்கு அதன்மீதுள்ள அக்கறைபற்றியும் எடுத்துரைத்தல்.

3. பிரயோக ஒழுக்க முறை பற்றி அறிவுறுத்தி அதன் பயன்பாட்டை இணையப்பாவனையில் வெளிப்படுத்த உகந்த செயன் முறைகளை பாவனையாளர்களிடையே ஏற்படுத்துதல்.

**ஆய்வுப் பிரச்சினை**

மெய்யியல் நோக்கில் பல்றேுபட்ட விடயங்கள் ஆய்வு செய்யப்பட்டாலும் இணையம் சம்பந்தமாக இவ்வாறான நோக்கில் ஆய்வு செய்யப்பட்டமை குறைவாகவே காணப்பட்டது. இதுவே இவ் ஆய்வினை மேற்கொள்வதற்கு முக்கிய காரணமாக இருந்தது. மற்றும் இன்றைய காலகட்டத்தில் இணையப்பாவனை அதிகமாக காணப்படுவதனாலும் இணையத்தின் முக்கியத்துவம் அதிகமாக காணப்படுவதனாலும், இணையப் பாவனை சமூகத்தில் தற்கொலை, சீரழிவு, இளையவர்களின் நடத்தை மாற்றம் போன்றன பல பாதிப்புக்களை ஏற்படுத்துவது ஒரு பிரச்சினையாகும்.

**ஆய்வு மூலங்களும் முறையியலும்**

இச் ஆய்வானது மதிப்பீட்டு முறை. பகுப்பாய்வு முறை, விபரிப்பு முறை போன்றவற்றைக்கொண்டுள்ளது. அத்தோடு ஆய்வு ஒன்றினை திறமையாக செய்து முடிக்க ஆய்வுக்கான தகவல்களையும் தரவுகளையும் சிறப்பானமுறையில் பெறக்கூடியதாக இருக்க வேண்டும் அப்போதுதான் அந்த ஆய்வு சிறப்பானதாக அமையும். ஆய்வு ஒன்றினை மேற்கொள்வதற்கு பல வகையான தரவுகள் பயன்படுத்தப்படுகின்றது

1. முதல் நிலைத்தரவுகள்
2. இரண்டாம் நிலைத்தரவுகள்

எனது ஆய்வினை சிறப்பான முறையில் மேற்கொள்வதற்கு இரண்டாம் நிலைத்தரவுகளே பயன்படுத்தப்பட்டது. ஏனெனில் இவ் ஆய்வினை வழிநடத்த இணையம் சம்பந்தமாகவும் அவற்றின் செயற்பாடு சம்பந்தமாகவும் மேலும் ஒழுக்கவியல் சம்பந்தமாகவும் தெளிவான விளக்கங்களைப் பெற ஏற்கனவே ஆராயப்பட்ட தரவுகளையும் அத்துடன் நுல்கள் பத்திரிகைகள், இணையத்தளங்கள், சஞ்சிகைகள், வாரஇதழ்கள், போன்ற எழுத்து மூல ஆவணங்களையே சார்ந்து மேற்கொள்ளப்படுகின்றது.

**ஆய்வுக் கருதுகோள்**

இவ் ஆய்வின் முக்கிய அம்சமாக உள்ள ஆய்வுக்கருதுகோளினை நோக்குவோமாக இருந்தால் இணையப்பாவனை ஒழுக்க நடத்தைகளைப் பாதிக்கின்றது என்பதாகும். மனிதனது இருப்புக்கும் இன, மத, சாதி, கலாச்சார இருப்புக்கும் இணையம் ஒரு சவாலாக உள்ளது. மேலும் இணையப் பாவனை கடமைகளுக்கு அப்பாற்பட்ட செயற்பாடுகளுக்கு உட்படும் போது மனித ஒழுக்கத்திற்கு பாரிய அச்சுறுத்தலாக அமைந்து விடுவதனை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

**இலக்கியமீளாய்வு**

ஒரு ஆய்வினை சிறப்பான முறையில் மேற் கொள்வதற்கும், அது சம்பந்தமான தகவல்களைப் பெறுவதற்கும் இத தொடர்பான முன்னைய ஆய்வுகளும் , நூல்களும் மக்கியமானவை. அந்த வகையில் எனது ஆய்வினை செய்து முடிப்பதற்கு பல்வேறுபட்ட இலக்கியங்கள் பயன்படுத்தப்பட்டது. அது பற்றிய மீளாய்வினை நோக்குவோம்.

கே.ஆர்,சுகுமார்என்பவர் 2007 இல் ''தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பம்'' என்ற நூலில் தகவல் தொழில் நுட்பம் பற்றிய வரைவிலக்கணத்தினைப் பெறுவற்கும், தகவல் தொழில்நுட்பம் சமூகத்திற்கு ஆற்றுகின்ற பங்களிப்புப் பற்றியும், மற்றும் தகவல் தொழில் நுட்பத்தின் பொதுவான பயன்பாடுகள் பற்றியும், இணையம் சம்பந்தமாக வரைவிலக்கணத்தினையும், இணையத்தின் தோற்றம் மற்றும் சமகால வளர்ச்சி பற்றியும் அந்நூலில் கூறியுள்ளார்.மேலும், மா.ஆண்டோ பீட்டர். மற்றும் அ.ராஜ்மோகன்,ஆகியோா் 1997 இல் ''இன்டர்நெட் கையேடு'' என்ற நூலில் இணையம் வழங்கும் வசதிகள் பற்றிய தகவல்களை சிறப்பான முறையில் பெறுவதற்கு முடிகிறது. மேலும் 1997 இல் சுஜாதா, என்பவா் ''வீட்டுக்குள் வரும் உலகம்'', என்ற நூலில் இணையத்தின் வழியாக என்ன என்ன விடயங்களைப் பெற்றுக் கொள்ளலாம் என்பது பற்றியும், இணையத்தினை யார்? யார்? பயன்படுத்துகின்றார்கள் என்பது பற்றியும் மேலும் இணையத்தின் மூலம் ஏற்படும் தாக்கங்கள் பற்றிய தகவல்களைப் பெறுவதற்கும் உதவியாக உள்ளது.

மேலும், ம.லெனின், என்பவர்1999 இல் ''இனி எல்லாம் இன்டர் நெட்'', என்பதில் இணையத்தின் மூலமாக சமூகரீதியான தாக்கங்கள் எவ்வாறு இடம்பெறுகின்றது என்பது பற்றிய தெளிவான விளக்கங்களைப் பெறுவதற்கு உதவியாக உள்ளது.மேலும், க.அபிராமி. 2001, இல், ''தகவல் தொழில்நுட்பம்'', என்ற நூலில், தகவல் தொழில்நுட்பம் தொடர்பான தகவல்களைப் பெறுவதற்கும் மற்றும் தகவல் தொழில்நுட்பத்தின் பயன்பாடுகள் பற்றிய தகவல்களைப் பெறுவதற்கும் உதவியாக உள்ளது.

**முடிவுரையும் விதந் துரைகளும்**

கணனி மற்றும் இணையத்தின் பாவனை இன்றைய காலகட்டத்தில் கட்டாயமாக்கப்பட்டு விட்டது,இவையின்றி எதுவும் நடக்காது என்ற அளவில் இன்றைய சமுதாயம் உள்ளது.ஒன்லைன் என்ற வசதியின் மூலம் தேர்வுகள்,பயணச்சீட்டு பதிதல்,வங்கிப் பரிமாற்றம்,மின்சாரக்கட்டணம் செலுத்துதல் போன்ற தேவைகளுக்காக நமது வீட்டின் சமையலறை வரை இதனை கொண்டு வந்துவிட்டோம்.நமது பழங்கால அஞ்சல்முறை சிறிதுசிறிதாக காலாவதியாகின்றது.இப்பொழுது ஈமெயில் மூலமே அனைத்து பரிவர்த்தனைகளும் நடைபெறுகின்றன.இணையத்திரையில் கண்ணுக்குத் தெரியாத வைரஸ் கிருமிகள் முதல் வானில் உள்ள கிரகங்கள் வரை நமது வீட்டு அறையிலிருந்து பார்க்கின்றோம்.உண்மைதான் இவையனைத்தும் ஆச்சரியமூட்டும் அபார வளர்ச்சிதான்.ஆனால் இதன் எதிர் மறையான வளர்ச்சி?

இப்படி எண்ணில் அடங்காத நன்மைகள் இணையத்தில் இருந்தாலும்,இதனையெல்லாம் மிஞ்சும் அளவிற்கு தீமைகளும் உள்ளன.இளைஞர்கள் கணனி முன் அமர்ந்து அவர்களுக்கு வேண்டிய எந்த திரைப்படத்தையும் காணலாம்.இதில் உள்ள மற்றொரு விபரீதம் என்னவெனில்

ஆபாசத்திரைப்படங்களும்,காணொளிகளும் ஏராளம்.இவையனைத்தும் இளைஞர்களை குறிவைத்தே வெளியிடப்படுகின்றன.ஒரு சிலர் அறிவினை வளர்த்துக் கொள்ள வந்தாலும் பெரும்பாலான இளைஞர்கள் ஆபாச படங்களை பார்க்கவே வருகின்றனர்.ஈதனை பிரவுசிங் சென்ரர்கள் அவர்களின் வருமானத்திற்காக கண்டுகொள்ளதில்லை.இந்த ஆபாசப்படங்களையும்,வீடியோக்களையும் இளைஞர்களிடம் கொண்டு சேர்ப்பதில் பெரும்பங்கு வகிப்பது செல்போன்கள். இணையத்திலன் மூலமாக நடக்கும் குற்றங்களின் எண்ணிக்கை நம்நாட்டில் அதிகரிக்கத் துவங்கியுள்ளது.இதனை ஆரம்பகட்டத்திலேயே வேரறுக்க வேண்டும்.இல்லையெனில் மரமாகி நமக்கு பெரும் சவாலாக நிற்கும்.

இணையப்பாவனையின் கடமை மீறிய செயற்பாடு, பொறுப்புக்களை நிறைவேற்றாமை, நன்மை தவறிய தீமைக்கான செயல்களை வழங்கல், துஸ்பிரயோகங்கள் போன்றவற்றினை முன்னிறுத்தி மனிதனின் மதம், இனம், மொழி, தழுவிய நடைமுறை வாழ்க்கை அடிப்படையிலும். கல்வி. அரசியல், பொருளாதாரம். ஏன்பன கோர்த்த கலை, கலாச்சார பண்பாட்டுரீதியான பாதிப்புக்களை இணையப்பாவனை ஏற்படுத்துவதனை இங்கு சமூக ஒழுக்கவிழுமியங்களில் ஏற்படுத்தும் தாக்கங்களாக சுட்டிக்காட்டலாம். இவ்வாறான அடிப்படையில் ஆய்வின் கருதுகோள் அம்சத்தினை தெளிவுறுத்தலாம்.

இணையமானது இன்றைய நவீன உலகில் பலரும் தமது தேவை கருதி அளவுக்கு அதிகமாக பயன்படுத்துவதனால் பல வகையான தாக்கங்களை சமூக ஒழுக்க விழுமியங்களில் ஏற்படுத்தி நிற்பதனைச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இணையத்தில் ஈமெயில் அனுப்பும் போது ஈமையிலின் ரகசியத்தன்மை இங்கு முக்கியப்படுத்தப்படுகின்றது. இல்லாவிட்டால் இதனை யார் வேணுமென்றாலும் படிக்கலாம் என்ற நிலைமை காணப்படுகின்றது. இவ்வாறாக ஒழுக்க தாக்கங்கள் இடம்பெறுகின்றது.

இணையத்தில் பெரும்பாலும் பயன்படுத்தும் செய்தி அனுப்பும் முறையான ஈமெயில் இன்று பல்வேறு ஒழுக்கமீறுகைகளை கொண்டுள்ளது. அதாவது ஒருவருக்கு அனுப்பும் ஈமெயில் இன்னொருவர் படிக்கும் சந்தற்பமும் அதே நேரம், ரகசியமின்மை போன்ற பிரச்சினையினை ஏற்படுத்தி சமூக ஒழுக்கவிழுமியங்களில் தாக்கத்தினை ஏற்படுத்தி நிற்பதனைக்காணலாம்.

இணையப்பாவனையினைப் பயன்படுத்தும் போது பல்வேறு வகையான சமூகத்தாக்கங்கள் இடம் பெறுவதனைக் காணலாம். இத்தாக்கங்களைக் குறைப்பதற்கு பல முறைகள் அல்லது தீர்வுகள் காணப்பட்டாலும் இன்றைய சமூகத்தினைரை அதனைப் பின்பற்றுவதாக இல்லை இருந்தும் இணையப்பாவனை சமூகத்தில் ஏற்படுத்தும் தாக்கங்களைக் குறைப்பதற்கு பின்வரும் தீர்வுகள் இன்றியமையாதவை ஆகும்.

இணையத்தொடர்பாட்டாளர்களுக்கு தொடர்பினை ஏற்படுத்தி விசேட அடையாளங்களினை ஏற்படுத்தல். ஆதன் மூலம் பிரச்சினைக்குரியவர்களுக்கு இலகுவில் அடையாளம் காணலாம்.ஒருவரின் தளத்திற்கு வேறொருவர் நுழைந்து அவரின் தகவல்கள், கோப்புக்களை மாற்றி அழிக்காத வண்ணம், இரகசிய உறுதியான பாதுகாப்பு சுவர்களை உருவாக்கலாம்.அடுத்தவரின் தளத்திற்கு நுழையும் நபர்களை தண்டனைக்குரியவர்களாக்கி அவரை இணையத்தொடர்பில் இருந்து தடை செய்ய வேண்டும்.வீடுகளிலும் கல்வி நிறுவனங்களிலும் இளம் வயதினர் இணையத்தினைப் பயன்படுத்துவதனை மட்டுப்படுத்த வேண்டும். மேலும் கல்வி நடவடிக்கைகளுக்கு பயன்படாத அனைத்து தொடர்புகளை தடை செய்து வைக்க வேண்டும். சமுதாய நாட்டின் முன்னேற்றத்திற்கான தகவல்கள், சிந்தனைகளை இணையத்தளங்களில் வெளியிட வேண்டும். ஆபாசம் தொடர்பாக இல்லாத. தளமே இல்லை பெருமளவுக்கு ஆபாசம் கொட்டிக்கிடக்கின்றது. முதலில் இணையத்தொடர்பினை ஏற்படுத்தும் வயதினை உறுதிப்படுத்த வேண்டும். அதற்காக பதிவு. புகைப்படம், அடையாளங்கள் உறுதிப்பாட்டு தொழில்நுட்பங்களை ஏற்படுத்த வேண்டும்.ஆபாசத் தளங்களினை கல்வி நிறுவனங்களுடன் தொடர்பான இடங்களில் தொடர்பில் தடைகளைச் செய்ய வேண்டும். இன்றைய காலகட்டத்தில் இணையத்தின் மூலமாக சிறுவர்கள் இணைய விளையாட்டுக்கள் மேலும் பல விடயங்களில் மூழ்கி (addiction) போதைவஸ்துக்கு அடிமையானதைப் போல் இணையத்தில் மூழ்கிக் கிடக்கின்றன இப்படியானவர்களை இனங்கண்டு அவர்களுக்கு உளவியல்ரீதியான மனநிலையை சுகப்படுத்த வேண்டும். இணையத்தின் மூலம் ஏற்படும் தாக்கத்தினை மாணவர்கள் மத்தியில் தெரியப்படுத்த வேண்டும் அப்போது மாணவர் சமுதாயம் அளவுக்கு அதிகமாக பயன்படுத்துவதனைக் குறைத்துக் கொள்வார்கள். ஆபாசங்கள், வன்முறைகள் போன்ற அநாவசிய தேவைப்பாடுகளுக்கு உபயோகிக்கப்படும் தளங்களை நீக்க வேண்டும். பாடசாலைகள், வேறு தனியார் இணையப் பார்க்கும் இடங்களில் குறிப்பிட்ட வயதினருக்கு மேற்பட்டோருக்கு இணையத்தினைப் பார்வையிட அனுமதி வழங்க வேண்டும். இணைய அரட்டைகள்; (internetchat), முகப்புத்தகம் (facebook) போன்றவற்றினை அளவுக்கு மீறிப்பயன்படுத்துவோருக்கு மற்றும் தேவையில்லாமல் தொடர்புகளை ஏற்படுத்துவதனையும் மட்டுப்படுத்த வேண்டும்.

இவ்வாறாக இணையத்தளத் தொடர்புகள் குறைக்கப்படும் போது, தமது தேவைக்கு மாத்திரம் பயன்படுத்தும் போது இணையத்தின் மூலம் சமுகத்தில் ஏற்படும் ஒழுக்கரீதியான தாக்கத்தினைக் குறைத்துக் கொள்ள முடியும். என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

**உசார்த்துணை நூல்கள்**


அபிராமி.க, (2001), தகவல் தொழில்நுட்பம், தமிழ் புத்தகாலயம், உதயம் பிரிண்டர்ஸ். சென்னை

அபிராமி.க, (2000), மல்ரிமீடியா கற்றுக் கொள்ளுங்கள், தமிழ் புத்தகாலயம், சென்னை-2

ஆண்டோ பீட்டர்.மா, மற்றும் ராஜ்மோகன்,.அ, (1997), இன்டர் நெட் கையேடு, விகாஸ் வெளியீடு, சென்னை

சிவானந்த மூர்த்தி.க, (2012) ஒழுக்கநியமங்களும் அதன் நடைமுறைகளும், வெளியீடு- லங்காபுத்தகசாலை, கொழும்பு

சுந்தராஜன், (2000) கம்பியுட்டர் கேள்வி பதில், கண்ணதாஸன் பதிப்பகம், சென்னை

சுகுமார்.கே.ஆர், (2007) தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்-111, வெளியீடு-கணனிப்பிரிவு கொக்குவில் இந்துக்கல்லூரி

சுஜாதா, (1998) வீட்டுக்குள் வரும் உலகம்,(இன்டர் நெட்), பிஸ்நெட் டிஎஸ் எஸ் லிமிட்டட், சென்னை

ராம்குமார், (2000) இன்டர்நெட்கேள்வி பதில்,வெளியீடு-மணிவாசகர்பதிப்பகம், சென்னை

ராஜமலர், (2001) நெட்வொர்க்-களின் அடிப்படை விளக்கங்கள், நர்மதா வெளியீடு

லெனின்.ம, (1999) இனி எல்லாம் இன்டர் நெட், வெளியீடு- சிக்ஸ் வென்ஸ் பப்ளிகே'ன், சென்னை

வெங்கடாசலம்.எஸ். (1994) கம்யூட்டர் ஓர் அறிமுகம், வெளியீடு- தமிழ்நாடு அறிவியல் இயக்கம், சென்னை

http;//en.wikipedia/org/wiki/Applied Ethics

http;//en.wikipedia/org/wiki/Ethics

Josep Dominick. R, (1987) The Dynamic of mass communication, , Second edition, U.S.A

Joseph. R. Desjardins, John. J. Mccall, 1996,Contemporary Issues In Business Ethics, An International Thomson Publishing company, Wadworth Publishing Company, Belmont Califomia, U.S.

வீரகேசரி, 17.11.2012

வீரகேசரி,05.01.2012

வீரகேசரி,14.10.2012

வீரகேசரி,31.10.2012

தினக்குரல்.14.10.2012